www.Padasalai.Net www.Trbtnpsc.Com

# Kanchipuram District

## முதல் திருப்புதல் தேர்வு – 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி **தாவரவியல்** மதிப்பெண்கள்:70

### பகுதி – I

**I எல்லா வினாக்களுக்கும் விடையளி. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** 15x1=15

1. Dr. நார்மன் போர்லாக் என்ற பெயர் எதனுடன் தொடர்புடையது?
அ) பசுமை புரட்சி ஆ) மஞ்சள் புரட்சி இ) வெள்ளை புரட்சி ஈ) நீலப் புரட்சி

2. 'T' வடிவ கிறல் ________ ஒட்டு முறையில் பயன்படுத்தப்படுகிறது.
அ) நா. ஒட்டுதல் ஆ) மொட்டு ஒட்டுதல் இ) நுனி ஒட்டுதல் ஈ) அணுகு ஒட்டுதல்

3. சுவர் பொருளான ஸ்போரோபொலினின் உருவாக மகரந்துகளின் எந்தப் பகுதி பங்காற்றுகிறது?
அ) உட்கரு மற்றும் டபீடம் ஆ) சைடோபிளாசம் மற்றும் டபீடம்
இ) மைடோகாண்ட்ரியா மற்றும் சைடோபிளாசம் ஈ) உட்கரு மற்றும் சைடோபிளாசம்

4. கீழ்கண்டவற்றுள் எது ஒருபால் மலர் ஆகும்?
அ) தென்னை ஆ) பாகற்காய் இ) ஆமணக்கு ஈ) பேரிச்சை

5. கேமிட்கள் எப்பொழுதும் கலப்புயிர்களாக இருப்பதில்லை எனும் கூற்று
அ) ஓங்கு விதி ஆ) சார்பின்றி ஒதுங்குதல் விதி
இ) தனித்துப்பிரிதல் விதி ஈ) இயைபிலாக் கருவுறுதல் விதி

6. மெய்யுட்கரு உயிர்களில் DNA இரட்டிப்பு நடைபெறும் போது பிரிக்கப்பட்ட பாலி நியூக்ளியோடைட் இழைகள் மீண்டும் ஹைட்ரஜன் பிணைப்புகளால் இரட்டை இழைகளாகி விடாமல் தடுக்க உதவும் புரதம்,
அ) புரதம் - A (RPA) ஆ) புரதம் - P (RPP) இ) புரதம் - F (RPF) ஈ) புரதம் - PF (RPF)

7. மறு கூட்டிணைவு தொழில்நுட்பம் பின்வரும் படிநிலைகளை கொண்டுள்ளது.
i) மரபணுக்களின் பெருக்கம்
ii) ஓம்புயிர் செல்லில் மறுகூட்டிணைவு DNA வை செலுத்துதல்
iii) தடை கட்டு நொதியை பயன்படுத்தி குறிப்பிட்ட இடத்தில் DNA வைத் துண்டித்தல்
iv) மரபணு பொருட்களை பிரித்தெடுத்தல் (DNA)
மறு கூட்டிணைவு தொழில் நுட்பத்தின் சரியான வரிசையைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) i, iii, iv, ii ஆ) iv, ii, iii, i இ) i, ii, iii, iv ஈ) iv, iii, i, ii

8. பிரித்தெடுக்கப்பட்ட புரோட்டோபிளாஸ்ட் 25% முதல் 30% செறிவுள்ள ________ மற்றும் ________ அயனியில் வைக்கும் போது இணைவு ஏற்படுகிறது.
அ) சுக்ரோஸ் மற்றும் Mg+ ஆ) பாலிஎத்திலீன் கிளைகால் மற்றும் Ca++
இ) பாலிஎத்திலீன் கிளைகால் மற்றும் Mg+ ஈ) மேசரோசைம் மற்றும் Ca++

9. கீழ்கண்டவற்றுள் எது நச்சு சகிப்புத்தன்மைக்கான எடுத்துக்காட்டு அல்ல?
அ) தக்காளி ஆ) கத்தரி இ) சோயா ஈ) நெல்

10. மட்குப்பொருள் உணவு சங்கிலியின் தொடக்கம்
அ) பறவைகள் ஆ) தாவரங்கள் இ) இறந்த உயிர்கள் ஈ) பாம்பு

11. மரத்தீவனத்திற்காக வளர்க்கப்படுகின்ற தாவரம் எது?
அ) செஸ்பேனியா மற்றும் அகேசியா ஆ) சொலானம் மற்றும் குரோட்டலேரியா
இ) கிளைடோகியா மற்றும்பிகோனியா ஈ) தேக்கு மற்றும் சந்தனம்

12. கீழ்கண்டவற்றில் சரியாக பொருந்தாத இணை எது?
அ) கோதுமை – ஹிம்கிரி ஆ) மில்பிரீட் – சாஹிவால்
இ) நெல் – ரத்னா ஈ) பூசோகோமல் – பிராசிகா

13. மிகச்சிறு தானிய வகைகளுக்கு எடுத்துக்காட்டு
அ) தினை மற்றும் வரகு ஆ) கேழ்வரகு மற்றும் சோளம்
இ) உளுந்து மற்றும் பாசிப்பயறு ஈ) கம்பு மற்றும் துவரை

14. பெரிய முட்கள் அல்லது சிறிய முட்களுடைய புதர்செடிகள் போன்ற வளர்ச்சி குன்றிய தாவரங்கள் காணப்படும் காடு வகை எது?
அ) மிதவெப்ப மண்டல காடுகள் ஆ) சதுப்பு நிலக்காடுகள்
இ) வெப்ப மண்டல காடுகள் ஈ) பசுமை மாறாக் காடுகள்

15. தாவும் மரபணுக்கள் கண்டறிந்த அமெரிக்க மரபியலாளர்
அ) T. போவேரி ஆ) W.S. சட்டன்
இ) தாமஸ் ஹண்ட் மார்கன் ஈ) பார்பரா மெக்ளியான்டாக்

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



பகுதி – II

II எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24–க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். 6x2=12

16. கனிக்குள் விதை முளைத்தல் என்றால் என்ன ? இது எந்த தாவர வகுப்பில் காணப்படுகிறது ?
17. கார்பன் கவரப்படுதல் மற்றும் சேகரித்தல் என்றால் என்ன ?
18. மதுமரபு மீட்சி வரையறு.
19. இரட்டைக்கருவுறுதல் என்றால் என்ன ?
20. கொல்லி மரபணுக்களால் தாவரங்கள் இறப்பதற்கான காரணம் என்ன ?
21. நுனி மூடல் என்றால் என்ன ?
22. தொழிற்சாலையில் நொதித்தலின் இரண்டு பயன்பாடுகளை குறிப்பிடுக.
23. உறைகுளிர் பாதுகாப்பு செயல் பாதுகாப்பான்கள் எவை ?
24. சில உயிரினங்கள் யூரிதெர்மல் மற்றும் சில உயிரினங்கள் ஸ்டெனோ தெர்மல் என்றும் ஏன் அழைக்கப்படுகிறது ?

பகுதி – III

III எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 33–க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். 6x3=18

25. மெண்டல் தனது ஆய்விற்காக தோட்டப்பட்டாணியைத் தேர்ந்தெடுத்தற்கான காரணங்கள் யாவை ?
26. சார்பதி சொனாரா மற்றும் காஸ்டர் அருணா – வேறுபடுத்துக.
27. உயிரி எதிரிப் பொருள் தடுப்பு அடையாள குறி என்றால் என்ன ?
28. செயற்கை விதைகள் எவ்வாறு உருவாக்கப்படுகிறது ?
29. நைட்ரஜன் பற்றாக்குறை உள்ள தாவரத்தை கூறு ? அதனைப் பற்றி சிறு குறிப்பு வரைக.
30. ஆற்றல் ஒட்டத்தின் வரைபட உருவமைப்பைக் கூறுக.
31. நீர் பற்றாக்குறை தீர்வை ஆலோசித்து அதன் நன்மைகளை விளக்கவும்.
32. விதை சேமித்தலில் வேம்பின் முக்கியத்துவத்தை விவாதி.
33. கசப்புகளின் அரசன் என அழைக்கப்படுவது எது ? அதன் மருத்துவ முக்கியத்துவத்தை குறிப்பிடுக.

பிரிவு – IV

IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5x5=25

34. அ) வாலிஸ்நேரியா ஸ்பைராலிஸில் மகரந்தச்சேர்க்கை நடைபெறும் முறையினை விவரி.

(அல்லது)

ஆ) பல்கூட்டு பாரம்பரியத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

35. அ) மனிதனால் முதன்முதலில் உருவாக்கப்பட்ட தானியத்தின் பெயரைக் குறிப்பிட்டு அதன் உருவாக்கத்தை விவரி.

(அல்லது)

ஆ) தாங்கிக் கடத்தியின் பண்புகளை பட்டியலிடுக.

36. அ) தாவரத்திசு வளர்ப்பில் அடங்கியுள்ள அடிப்படைக் கொள்கைகளை விளக்குக.

(அல்லது)

ஆ) பல்வேறு வகையான எதிர்மறை இடைச்செயல்கள் குறித்து விவரி.

37. அ) ஹைட்ரில்லா தண்டின் குறுவெட்டுத்தை படம் வரைந்து அதில் காணப்படும் தகவமைப்புகள் இரண்டினை குறிப்பிடு.

(அல்லது)

ஆ) கீழ்கண்ட விவரங்களைக் கொண்டு ஒரு பிரமிட் வரைந்து சுருக்கமாக விளக்குக. உயிரினங்களின் எண்ணிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.
பருந்து – 20, தாவரங்கள் – 500, முயல் மற்றும் எலி 150+150, பாம்பு மற்றும் ஓணான் 50+20

38. அ) காடழிப்பின் விளைவுகளை விரிவாக எழுதவும்.

(அல்லது)

ஆ) பயிர் பெருக்கம் என்றால் என்ன ? அவற்றின் குறிக்கோள்கள் யாவை ?

***/***

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com